# மலையாளச் சிறுகதைகளில் பண்பாட்டுப் பதிவுகள்

*த. தேவகி*
முனைவர் பட்ட ஆய்வாளர்
இந்தியமொழிகள் (ம) ஒப்பிலக்கியப்பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783932

*அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்றார் ஔவையார். அத்தகைய கிடைத்தற்கரிய மானிடப் பிறவி உயிரினங்களில் உயர்ந்த பிறவி என்று நாம் கூறுகிறோம். அப்படிப்பட்ட உயர்ந்த பிறவிக்குப் பண்பாட்டுக் கூறுகளான விருந்தோம்பல், ஈகை, மானம், நட்பு, ஒழுக்கம் இவை அனைத்தும் ஒருங்கே பெற்ற உயர்ந்த பண்பான மனிதநேயம் மிகவும் இன்றியமையாததாகும். இந்த உயர்ந்த பண்புகளைச் சங்க இலக்கியக் காலக்கட்டத்தில் நிலவிய சமூக அமைப்பின் மூலம் காணமுடிகிறது.*

*மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்துவது பண்பாடாகும். இப்பண்பாடு காலத்திற்குக் காலம் நாட்டிற்கு நாடு, இனத்திற்கு இனம் வேறுபடும். ஒரு நாட்டின் பெருமைக்கும் சிறப்புக்கும் காரணம் அங்கு வாழும் மக்களின் பண்பாடு என்பதை,*

***நாடா கொன்றோ காடா கொன்றோ***
***அவலா கொன்றோ மிசையா கொன்றோ***
***எவ்வழி நல்லவ ராடவர்!***
***அவ்வழி நல்லை நிலமே***

*எனும் ஔவையார் பாடல் நமக்கு எடுத்துரைக்கிறது. காலந்தோறும் தொடர்ச்சியாக சிறுகதைகள் மாற்றம் கண்டு வந்துள்ளன. இந்த மாற்றம் சமூக வாழ்வில் ஏற்பட்ட அக, புற மாற்றங்கள். இதனைப் பண்பாடு மாற்றங்கள் எனலாம். பட்டறையில் மலர்ந்த மலையாளச் சிறுகதைகள் என்ற தொகுப்பிலுள்ள சிறுகதை, மலையாளத்தில் லலிதாம்பிகா அந்தர்ஜனம் அவர்களால் எழுதப்பட்டு தமிழில் சிற்பி. பாலசுப்பிரமணியன் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட சிறுகதைதான் மானிட புத்திரி என்பதாகும். இச்சிறுகதையில் இத்தகைய கூறுகள் வெளிப்படுவதைக் காணலாம். இக்கதையை வாசிக்கின்றபோது, நமது பண்பாட்டு வெளியை, அது காலந்தோறும் மாற்றம் கண்டு வந்துள்ள தன்மைகளையும் மாறாத மகிமைகளையும் அறியமுடிகிது. அவற்றில் உணவுக்கான கஷ்டப்படுபவர்களுக்கு உணவைக் தாரளமாக கொடுத்து அவர்களின் பசியைப் போக்குகின்ற சிறுகதை. மற்றவர்களுக்கு கொடுத்து வாழ்வது என்பதே நம் பண்பாடாக இருக்கிறது. அவற்றை சிறுகதையில் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளனர்.*

## பண்பாடு - விளக்கம்

*சமூகவியல் அறிஞர்களின்* (Social Scientists) *கருத்துப்படி பண்பாடு என்பது வாழ்க்கை முறை* (Way of life) *என்பதாகும். ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் ஒரு பண்பாடு உண்டு. ஒரு சமுதாயத்தில் வாழுகின்ற பெரும்பான்மை மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் அது வெளிப்படுத்தும். ஒரு சமுதாயத்தில் அமைந்துள்ள கலை, நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், மொழி, இலக்கியம், விழுமியங்கள்* (Values) *முதலியன அந்தச் சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகள் எனப்படும்.*

## பண்பாடு பற்றிய அறிஞர்களின் கருத்து

*பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், பழக்கவழக்கம் முதலானவையும் மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுத்தொகுதியாகும் என்பர். (உ.க.டைய்லர் - கலைக்களஞ்சியம், ப.16)*

*மக்களின் சிந்தனையும், செயலும், நடவடிக்கையும் ஒவ்வொர் இனத்தவரிடமிருந்து வேறுபட்டுக் காணப்படுவது பண்பாடாகும். (ரூத் பெனிடிக்ட், க்ரியாவின் தமிழ் அகராதி, ப.669)*

*பண்படுவது பண்பாடு என்றும், பண்படுத்தல் என்பது சீர்ப்படுத்தல் அல்லது திருத்துதல் திருந்திய நிலத்தை பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும், திருந்திய தமிழைப்பண்பட்ட செந்தமிழ்என்றும்திருந்திய உள்ளத்தை பண்பட்ட உள்ளமென்றும் சொல்வது வழக்கம். (தேவநேயப்பாவாணர்)*

**ஈகை**

*எந்தப் பயனும் கருதாது ஒருவர்க்கு ஒரு பொருளை அளித்தல் ஈகை எனப்படும். தன்னலம் கருதாது பொது நலம் கருதி வாழும் வாழ்க்கையில் பெறப்படும் இன்பமே, நிலையான இன்பமாகும். ஒப்புரவு பண்பும், ஈகைப்பண்பும் சமூக வளர்ச்சிக்கு இன்றியமையாதது. பகுத்துண்டு வாழும் வாழ்வே சிறந்த வாழ்வு ஈகைப்பண்பைக் குறிக்க,*

***சிறிய பொருள் கொடுத்துச் செய்த வினையால்***
***பெரிய பொருள் கருதுவாரே - விரி பூ***
***விராஅம் புனலூர வேண்டயிரை விட்டு***
***(பழ.நா.பா.379)***

*என்ற பாடலில் அரசர்கள் தம்மை நாடி வந்த இரப்போர்க்கு இல்லை என்று கூறாது வழங்கும் வள்ளல் குணம் உடையவர்கள் பகைவர்களையும் வெல்லும் ஆற்றலுடைய அவர்கள் எதற்கும் அச்சப்படமாட்டார்கள் என்பதில் அரசனின் மறமும் ஈகைக் குணமும் வெளிப்படுகின்றன.*

***இல்லா விடத்தும் இயைந்த அளவினால்***
***உள்ள விடம்போற் பெரிதுவந்து - மெல்லக்***
***கொடையோடு பட்ட குணனுடைய மாந்தர்க்(கு)***
***அடையாளம் ஆண்டைக் கதவு (நாலடி - 91)***

*தமக்கு செல்வம் இல்லாமல் போன காலத்திலும் தமக்கு இயைந்தமாட்டில் செல்வமிருக்கும் காலத்தைப் போல் வந்தவர்களைப் பார்த்து மகிழ்ச்சியுடன் கொடுக்கும் குணமுள்ள மனிதருக்குச் செல்வம் என்பது குன்றாது மிகுதி அடையும் என்பதை நாலடியார் பாடலின் வழி அறியமுடிகிறது.*

**கதைச்சுருக்கம்**

*மானிட புத்திரி என்ற சிறுகதையில், கோவிந்தன் குட்டி என்பவர் தன் குடும்பம் வறுமையில் இருந்த காலத்தில் தன்னையும் தனக்கு செந்தமென்று சொல்லிக் கொள்ள இருந்த தாயாரையும் உணவு கொடுத்து காப்பாற்றியவள், இப்போது வறுமையில் தன்னைக் காண வந்தபோது உங்களால் தான் இந்த உயர்ந்த உத்தியோகத்தில் உள்ளேன் என்று தன்நிலை மறந்து அந்த வயதான அம்மாவின் காலில் விழுந்து மன்னிப்புக்கேட்பதும், மன்னியுங்கள் அம்மா. இந்த கோவிந்தன் குட்டி ஒரு துஷ்டன், பாவி, நன்றி கெட்டவன். ஆனாலும் தாங்கள் சபித்துவிட மாட்டீர்கள். அந்தப் பரம்பரை இல்லத்தை அழித்தவர்கள் நாங்கள். குத்தகை கிடைக்ககாமல் செய்தவர்கள் நாங்கள். உண்ண உணவு இல்லாத மக்களுக்காக நடத்திய போராட்டத்தில் அன்னமூட்டிய கைகளை நாங்கள் மறந்துவிட்டோம். தான் அவர்களை கண்டுகொள்ளாமல் விட்டதற்கு இனிமேல் எனக்கு தாயாக நீங்கள் இருக்க வேண்டும் என்று அன்பு கட்டளையிடுவதும், தன் செய்த தவறுக்கு வருந்தி பிராய்சித்தம் தேடுவதுமாக இக்கதை அமைக்கப்பட்டிருக்கிறது.*

**கதைக்கரு**

*கோவிந்தன் குட்டியால் நடந்த தவறை சரி செய்யும் விதமாக செய்நன்றியை மறக்காமல் தங்களை வாழ வைத்த ஒரு பெண்மணிக்காக அவரின் காலில் விழவும் தயங்கவில்லை. அவர் எவ்வளவு பெரிய அதிகாரத்தில் உள்ளவர். அவர் நினைத்திருந்தால் அந்த அம்மாவைத் தெரியாது என்று கூட சொல்லி அனுப்பியிருக்கலாம். ஆனால் அவர் செய்த தவறை அவரே சரி செய்ய முன்வருகிறார்.*

**சிறுகதையில் ஈகை மனம்**

*அந்தமுகம் ஒரு அம்மனின் தோற்றத்தில் இருப்பதாகவே அவர் நினைவில் நின்றது. கோயில் வாசலில்தான் குஞ்ஞாலத்தம்மாவை எப்போதும்சந்திக்க நேர்ந்ததும் என்பதனாலா? அல்லது சோற்று உருண்டையை நீட்டியபடி அன்னபூரணியைப் போல அவர் நின்ற காட்சியினாலா? (பட்டறையில் மலர்ந்த மலையாளச் சிறுகதைகள், ப.33)*

*சோற்றுக்கே வழியில்லாத ஒரு குடும்பத்தில் உள்ள குழந்தைதான் கோவிந்தன் குட்டி அவருக்கு தினமும் பசியை போக்கிய பெண்மணி குஞ்ஞாலத்தம்மா என்பவர். மனிதர்களிடம் எவ்வளவு சொத்து இருந்தாலும் கொடுப்பதற்கென்று ஒரு மனம் வேண்டும். அது அதிகமாகவே குஞ்ஞாலத்தம்மாவிடம் இருந்ததினால் அக்குழந்தைக்கு வயிறார உணவு போட்டாள். அந்த பெண்ணின் ஈகை குணம் இதில் வெளிப்படுகிறது.*

**கொடுத்துக் கெட்ட குடும்பம்**

*கொடுத்துக் கொடுத்துத்தான் இந்த இல்லத்தார் அழிந்து போனார்கள். காலம் மாறிப்போனதை அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. வீட்டுக்கு யார் போனாலும் உபசரிப்பார்கள். குத்தகையும் விவசாய வரவும் இல்லாமல் போனபோது வயல்களை விற்று அரிசி வாங்கினார்கள். நம்பூதிரியின் மரணச்சடங்கிற்கு இருப்பத்தைந்து மூட்டை அரிசி வாங்கி விருந்துக்காக செலவு செய்தார்கள்.(பட்டறையில் மலர்ந்த மலையாளச் சிறுகதைகள், ப. 35)*

*வயலை விற்று, கொல்லையை விற்று, வீட்டை விற்று அடுத்தவர்களுக்கு உணவளித்தே ஒன்றுமில்லாத குடும்பமாக போனது. இறுதியில் அவர்களுக்கே சோற்றுக்கு வழியில்லாமல் போய், இருக்க இடமில்லாமல் நடுத்தெருவில் நிற்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். அனைத்தையும் விற்று மற்றவர்களுக்கு விருந்தளித்த அவர்களின் ஈகை குணம் இவற்றில் வெளிப்படுவதைக் காணமுடிகிறது.*

**நன்றி மறவாத் தன்மை**

*கோவிந்தன் குட்டி வளர்ந்து மிகப்பெரிய அரசியல்வாதியாக இருக்கிறார். அவர் யார் என்று தெரியாமல் தனக்கென்று இருந்த வீட்டை இடித்துவிட்டு அந்த இடத்தையும் அரசியல்வாதிகள் பிடுங்கிக் கொண்டார்கள் என்று கூறவும், அதற்கு நியாயம் கேட்டு அவரைக்காண குஞ்ஞாலத்தம்மா வருகிறார். பேரனை முன்னால் நிறுத்தி வேறெதுவும் முடியாவிட்டாலும் இந்தப் பையனை ஏதாச்சும் பள்ளிக்கூடத்தில் சேர்த்திடு அப்பா - மதியக் கஞ்சியாவது அவனுக்குக் கிடைக்கட்டும். தலைவர் திடுக்கிட்டு உணர்ச்சிவசப்பட்டு நின்றார். அன்னபூரணா தேவியான குஞ்ஞாலத்தம்மாவின் பேரனுக்கு மதிய வேளைக் கஞ்சிக்கு கெஞ்ச வேண்டிய நிலை வந்திருக்கிறது.*

*மேலும், மன்னியுங்கள் அம்மா இந்த கோவிந்தன் குட்டி ஒரு துஷ்டன். உண்ண உணவு இல்லாத மக்களுக்காக நாங்கள் நடத்திய போராட்டத்தில் அன்னமூட்டிய கைகளை நாங்கள் மறந்துவிட்டோம். ஆனாலும் அம்மா உங்களிடம் ஒரு விண்ணப்பம். தாயில்லாத இந்தக் கோவிந்தன் குட்டிக்கு அம்மாவாக வேண்டும் என்று அன்புடன் கூறுகிறார் அந்த மிகப் பெரிய அரசியல்வாதி.(பட்டறையில் மலர்ந்த மலையாளச் சிறுகதைகள், ப.37)*

*எல்லோரும் எப்போதும் நன்றி மறவா மனத்துடன் வாழ்வதில்லை. சிறுமையில் வாழும்போது மற்றவர்களின் தயவில் வாழ்பவர்கள் வளர்ந்து ஒரு நல்ல நிலமையில் இருக்கும்போது கடந்தகாலத்தை எண்ணாமல் மனம்போன போக்கில் வாழ்வார்கள். இந்த நிலமைக்கு வரக் காரணமாக இருந்தவர்கள் ஏதேனும் உதவி என்று அவர்கள் முன்பு போய் நின்றாலும் மதிக்காததோடு அவர்களை உதாசினப்படுத்தி அனுப்பிவிடுவார்கள். ஆனால் இச்சிறுகதையில் நன்றி மறவா மனத்தோடு இருக்கும் ஒரு அரசியல்வாதியைக் காணமுடிகிறது. இன்றைய நிலை*

*இன்றைய சமுதாயமானது உலகமயமாதல், மேனாட்டு கலாச்சார மோகம், தொடர்பாடல் வலுப்பெற்றமை போன்றவற்றால் நமது பண்பாட்டு கலாச்சாரத்தின் உடை, உணவு, கலை என்பவற்றில் இருந்து விலகி செல்கின்ற தன்மையைக் காணக்கூடியதாக உள்ளது. தன் இனத்தினுடைய அடையாளங்களான பண்பாடு மற்றும் கலாசாரத்தை விட்டுக் கொடுப்பது தனது பிறப்புரிமையை விட்டுக் கொடுப்பதற்கு சமனான செயலாகும். வெளித்தோற்றத்தில் பிற பண்பாட்டை கலாச்சாரத்தை பிரதிபலித்து காட்டினாலும் தமிழரின் தனித்தன்மை கொண்ட பண்பாடு கலாச்சாரம் என்பன ஏதோ ஒரு விதத்தில் வெளிப்படுத்தப்படுவதாகவே இருக்கும்.*

**இளைய தலைமுறையினரின் கடமை**

*நம் முன்னோர் உருவாக்கி கடைப்பிடித்த பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் பின்பற்ற வேண்டியது எம் தலையாய கடமையாகும். பிறதேச கலாச்சார மோகங்களை தவிர்த்தல், எமது கலாச்சார உடைகளை அணிதல், பண்டிகைகளை கொண்டாடுதல், அடுத்த தலைமுறைக்கு இவைபற்றி கற்பித்தல் என்பன நம் பண்பாடு கலாச்சாரத்தை பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய கடமை ஆகும்.*

**தொகுப்புரை**

*உலகம் கண்ட மூத்த குடியின் சிறப்புமிக்க இந்த பண்பாடும் கலாச்சாரமும் தலைமுறை நூறு கடந்தாலும் தன் தனித்தன்மை காரணமாக தலைச்சிறந்ததாகவே உலக மக்களால் போற்றப்படும். எனவேதான் நாகரீகம் என்ற பெயரில் பல நூறு தலைமுறை கடந்து வந்தாலும் நம் பண்பாட்டு எச்சங்கள் வாழ்வியலின் ஒவ்வொரு காலத்திலும் பின்தொடர்ந்து வருகின்றன.*

*உலகுக்கே பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் சொல்லி கொடுத்த இனம் எப்போதும் எமது பெருமைகளை மறந்து விடக்கூடாது. அடுத்த தலைமுறைக்கும் இதை சொல்லி கொடுக்க நாம் தவற கூடாது.*

**அடிக்குறிப்புகள்**

1. *உ.க.டைய்லர் - கலைக்களஞ்சியம், ப.16*
2. *ரூத் பெனிடிக்ட், க்ரியாவின் தமிழ் அகராதி, ப.669*
3. *பழமொழி நானூறு, பாடல்.379*
4. *நாலடியார், பாடல் - 91*
5. *பட்டறையில் மலர்ந்த மலையாளச் சிறுகதைகள், ப.33*
6. *பட்டறையில் மலர்ந்த மலையாளச் சிறுகதைகள், ப. 35*
7. *பட்டறையில் மலர்ந்த மலையாளச் சிறுகதைகள், ப.37*